# குறைந்த கட்டணத்தில் இணையதள தொலைக்காட்சி சேவைகள்!

## அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பதிலுரை ... 9- ஆம் பக்கத் தொடர்ச்சி

விலைக் கொணரும் முறையில் சுமார் 3.60 ஏக்கர் நிலத்தில் ஒரு IT infrastructure உருவாக்குதல்.

சென்னையில் பெருகிவரும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த நிறுவனங்களுக்கான இடவசதித் தேவைகளைப் பூர்த்தி செய்திடும் வகையில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம், பெருங்குடி தொழிற்பேட்டையில் ஏறத்தாழ 3.60 ஏக்கர் நிலத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா/அலுவலக இடவசதியை வெளிப்படைத்தன்மையுடன் விலைக் கொணரும் முறையில் அமைக்கும்.

4. தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பானது (TNGIS) கண்காணிப்பு, திட்டமிடல் மற்றும் முடிவுகளை மேற்கொள்ள ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆளுகையில் இடஞ்சார்ந்த தரவுகளை வலுவாகப் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, மாநிலம் முழுமைக்குமான உயர் தெளிவுடன் கூடிய செயற்கைக்கோள் புகைப்படங்களைக் கொள்முதல் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. நிலஅளவைப் பணிகளில், வேறுபட்ட உலகளாவிய நிலைப்படுத்தல் அமைப்பு (Differential Global Positioning System) முறையிலான தொடர்ந்து செயல்படும் குறிப்பு நிலையத்தைப் (Continuously Operating Reference Station) பயன்படுத்தி, செயற்கைக்கோள் தரவுகளின் நிலைத் துல்லியத்தை மேம்படுத்தவும், ஊரகம் மற்றும் நகர்ப்புற நில வரைபடங்களைப் புவியியல் ரீதியாகக் குறியிட்டும், மாநிலம் முழுமைக்குமான நில வரைபடம் உருவாக்கப்படும்.

இந்தத் தடையற்ற இடஞ்சார்ந்த நில வரைபடத் தரவுக் கட்டமைப்பானது, ஒருங்கிணைந்த துறைகளினால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிதியினைத் தொகுத்து ரூ.15 கோடி செலவில் உருவாக்கப்பட்டு, அனைத்துத் துறைகளின் திட்டமிடல், திட்டக் கண்காணிப்பு மற்றும் கொள்கை உருவாக்கும் செயல்முறைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

புவிசார் கட்டமைப்பு உருவாக்கம். ஏற்கெனவே, TNGIS Tamil Nadu Geographical Information System என்று team TNeGA-ல் செயல்பட்டு வருகிறது. ஆனால், பட்டா வழங்குதல் என்று Government records for land management இவையெல்லாம் அந்த GIS இல்லாமல் அந்த paperல் recordஆக இருக்கிறது. எனவே, Differential Global Positioning System மூலம் Continuously Operating Reference Stationல் நாமே அந்த Gap-ஐ கண்டுபிடிக்கும் அளவிற்கு Satelliteக்கும் உண்மைக்கும் வித்தியாசம் சொல்கிற அளவுக்கு உருவாக்கி, அரசினுடைய அனைத்து சேவைகளும் இந்த Location specific ஆக tag உடன் செயல்படுத்துவதற்கு ஓர் அறிவிப்பு.

5. 2024-25ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET), அரசு சுகாதார சேவை வழங்குநர்கள் உள்ளிட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் (PHCs), அரசுக் கல்லூரிகள் மற்றும் தொலை தூரங்களில் அமைந்துள்ள இதர பிற நிறுவனங்கள் உட்பட 30,000 பயனாளர்களைக் குறைந்த விலையில் அதிவேக இணைய அலை வரிசையுடன் இணைக்கவுள்ளது. இந்த முயற்சி, அரசுத் துறைகளின் விரிவான சேவைகளை ஊரகப்பகுதி மக்களுக்குத் தடையின்றி வழங்கிட வழிவகை செய்யும். இதன்மூலம், அத்தியாவசிய அரசு சேவைகளை ஊரகப்பகுதி மக்கள் எளிதாக அணுகிட வழிவகை செய்வதுடன், டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அனைவரும் பெற்றிட ஊக்குவித்து, டிஜிட்டல் யுகத்தில் யாரும் விடுபடாமல் இருப்பதை உறுதிசெய்ய இயலும்.

ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு அதிவேக இணைய அலை கற்றை TANFINET FibreNet வந்தவுடன், இந்த PHCs குறிப்பாக Rural PHCs மற்றும் Medical colleges, medical services எல்லாம் low cost அல்லது zero costல் integrate செய்து, எல்லாவற்றிற்கும் remote access கிடைக்கிற அளவில் இந்த service உருவாக்குகிறது.

### குறைந்த கட்டணத்தில் இணையதளத் தொலைக்காட்சி சேவைகள் !

6. தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், டிஜிட்டல் கேபிள் டிவி சேவையினைக் குறைந்த கட்டணத்தில் தமிழ்நாட்டு மக்களுக்கு வழங்கிவருகிறது. தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் (TANFINET) கண்ணாடி இழைக் கம்பிவடம் (Optical Fibre Cable) மற்றும் இணைய சேவைகள் மற்றும் பிற இணைய சேவை நிறுவனங்களின் சேவையைப் பயன்படுத்தி, மதிப்புக்கூட்டுச் சேவையாக சந்தாதாரர்களுக்கு இணையதளத் தொலைக்காட்சி சேவைகளை (IPTV) தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் குறைந்த கட்டணத்தில் விரைவில் வழங்கும்.

குறைந்த கட்டணத்தில் இணையதளத் தொலைக்காட்சி சேவைகள் வழங்குதல். அதை ஏற்கெனவே உறுப்பினர் மு. பாபு அவர்கள் கேட்டபோது, நான் சொன்னது, இந்த Broadband எல்லாம் intermediate step. Eventually எங்களுடைய விருப்பம் 4Kக்கு மேலே high definition ஆக TANFINET மூலமாக IPTV வழங்குதல் ஆகும்.

7. செயற்கை நுண்ணறிவு, படைப்புத் தொழில்நுட்பம், பொருள் அறிவியல், நானோ தொழில்நுட்பம், துளிமக் கணிமை (Quantum Computing) போன்ற துறைகளில், ஆராய்ச்சி அடிப்படையிலான முன்னேற்றங்களை உள்ளடக்கிய ஆழ்நிலைத் தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பம் ஆகியவை, புத்தாக்கத் திருப்புமுனைகளை உருவாக்குவதற்கான அடித்தளமாக உள்ளன. முக்கியமான சிக்கல் கூறுகளுக்கு மேம்பட்ட தொழில்நுட்பத் தீர்வுகளை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு, ஆற்றல்மிகு தாக்கம் மற்றும் மதிப்புருவாக்கம், அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்பு உருவாக்கம், மேம்பட்ட பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை இத்துறைகளின் புத்தொழில் நிறுவனங்கள் கொண்டுள்ளன. மேம்பட்ட ஆராய்ச்சியின் அடிப்படையிலான ஆழ்நிலைத் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளின் பயன்பாட்டு ஊக்குவிப்புக்காகவும், ஆழ்நிலைத் தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவுவதற்காகவும், "தமிழ்நாடு ஆழ்நிலைத் தொழில்நுட்பக் கொள்கை (Tamil Nadu Deep Tech Policy)" ஒன்றை அரசு இவ்வாண்டு வெளியிடும்.

## மூன்றாண்டுகளுக்கொருமுறை பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு நடத்தப்படும்!

Tamil Nadu Deep Tech Policy உருவாக்கம். இந்த Deep Techல் தமிழ்நாடு ஏற்கெனவே இந்திய அளவில் ஒரு முன்னோடி மாநிலமாக இருந்தாலும், உலகளவில் நாம் இருக்கவேண்டுமென்ற காரணத்திற்காக ஏற்கெனவே இருந்த Finland team அதுமட்டுமல்லாமல் முந்தையதினம் National Quantum Computing Mission அதனுடைய தலைவர் அஜய் சௌத்ரி வந்திருந்தார். இது மாதிரி இணைப்புகளோடு IIT Madras Research Park மற்றும் நம்முடைய iTNT மற்றும் National Missionஉடன் சேர்ந்து ஒரு Deep Tech system உருவாக்குவதற்கு ஒரு policy இங்கே உருவாக்கப்படும்.

8. அறிவுசார் சொத்து என்பது ஆழ்நிலைத் தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்துவரும் தொழில்நுட்பப் புத்தாக்கத் தொழில் முனைவோர்க்கான அடிக்கல்லாகும். கடந்த இரண்டு ஆண்டுகளில், இந்திய அளவில் காப்புரிமை தாக்கல் செய்வதில் மொத்தம் 12,948 காப்புரிமைகளுடன் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இது முக்கியமாக ஆழ்நிலைத் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளால் சாத்தியமானது. கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற தொழில் நிறுவனங் களுக்கு இடையே தொழில்நுட்பப் பரிமாற்றங்களை எளிதாக்கி, தமிழ்நாட்டினை அறிவுசார் சொத்துரிமையின் தலைநகராக உருவாக்கிடவும், அறிவுசார் சொத்துரிமை வணிகமயமாக்கலை ஊக்குவிக்கவும், "தமிழ்நாட்டில் புத்தமை" (IN2TN) எனும் மாநாடு ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசால் நடத்தப்படும்.

தமிழ்நாடு அறிவுசார் சொத்துரிமைக் கண்டுபிடிப்புகளின் மாநாட்டை ஆண்டுதோறும் நடத்துதல். R&Dயிலும் Patent filingலும் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிற சூழ்நிலையில், இதை இன்னும் ஊக்குவிப்பதற்கும், இதை From IP to Execution, from Intellectual Property to Execution, from Patent to execution செய்வதற்கும், ஆண்டுதோறும் IN2TN அதாவது Innovation TN செய்வதற்கு ஒரு Annual Conference நடத்தப்படும். இந்தாண்டு அடுத்த மாதத்திலே நடத்த இருக்கின்றோம்.

9. ICTACT நிறுவனம், அனைத்து அரசு தொழில் பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு தனது இலவச உறுப்பினர் சேவை மூலம் பின்வரும் 16 சேவைகளை வழங்கவுள்ளது:

1. ஆசிரியர் திறன் மேம்பாடு, 2. மாணவர்களுக்கான சான்றிதழ் திட்டம், 3. கருத்தரங்குகள், 4. வளர்தொழில்நுட்பங்களுக்கான சிறப்பு மையம், 5. இணையவழிக் கற்றல் நிகழ்வுகள், 6. இளைஞர்களுக்கான அறிவுசார் போட்டிகள், 7.பெருநிறுவன கூட்டாண்மைத் திட்டங்கள், 8. கற்றல் வளங்களை இலவசமாகப் பெறுதல், 9. ஆராய்ச்சி மாநாடுகளை இணைந்து நடத்துதல், 10. ICTACT வெளியீடுகள், 11. நிறுவனங்களுடன் இணைப்பு, 12. பயிற்சிக்கான இணையதளத்தை அணுகுதல், 13. வேலைவாய்ப்பு உதவி, 14. ICTACT ஆராய்ச்சி இதழ்கள், 15. ICT அகாடமி விருதுகள், 16. தகவல் பலகையை அணுகுதல்.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் அதாவது, Government ITIs அரசு தொழில்நுட்பக் கல்லூரிகள் Polytechnics ஆகியவற்றுக்கு ICT Academy நான் ஏற்கெனவே சொன்னேன் நாட்டிலேயே முதல் Training Academyஆக இருக்கக்கூடியது Information Technologyல் 10 மாநிலங்களில் அலுவலகம் வைத்து, இது தமிழ்நாடு அரசு நிறுவனமாக இருந்தாலும், இந்த அளவிலே நாட்டிலே முதல் அளவில் இருக்கிறதை நமது இளைஞர்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தும்வகையில், அரசினுடைய அனைத்து ITIக்கும் ICT Academy Polytechnics-க்கும் இலவசமாக Membership கொடுத்து அங்கு இருக்கிற மாணவர்களுக்கு இந்த Advanced training-ம் கொடுப்பதற்கு ஒரு வழி வகுக்கும்.

10. தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் செயல்முறை ஆராய்ச்சி மையத்தை ICTACT நிறுவனம் அமைக்கும். இந்த மையம், கல்விசார் ஆராய்ச்சி மற்றும் தொழில்துறைப் பயன்பாடுகளுக்கிடையே ஒரு பாலமாக இருந்து, அதிநவீனக் கண்டுபிடிப்புகளை நடைமுறைத் தீர்வுகளாக மாற்றி அமைக்கும். விரைவாக மாறிவரும் தொழில்நுட்பத் தளத்தில், அடுத்த தலைமுறை விஞ்ஞானிகள், பொறியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியோருக்குத் தேவையான நவீனத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் பட்டறிவு இம்மையத்தின் மூலம் வழங்கப்படும்.

ICT Academyல் ஒரு செயல்முறை ஆராய்ச்சி. அதாவது Applied Research Centre எப்படி Latest technologiesஐ பயன்பாட்டிற்கும், கல்வி practical trainingக்கும் கொண்டுசென்று, சிறப்பிப்பதற்கு ஒரு Applied Research Centre.

11. தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் உலகெங்குமுள்ள தொடர்பு மையங்களிலும், சென்னை மண்டல கேந்திரிய வித்யாலயா பள்ளிகளிலும் வழங்கப்பட்டுவரும் சான்றிதழ்க் கல்விப் பாடத்திட்டம், ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கும், வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட்டுவரும் பேச்சுத் தமிழ் வகுப்புகள் முதலிய கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்திட, தொடர் செலவினமாக ஆண்டொன்றுக்கு ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

தமிழ்க் கற்றல் - கற்பித்தல் செயல்பாடுகள் விரிவாக்கம். TVA - Tamil Virtual Academyல் ஏற்கெனவே பல வகைகளில் From teachers certification, teachers deputation, teachers degree அது மட்டுமல்லால் ஏற்கெனவே இருக்கிற Remote learningல் முயற்சிகளை சிறப்பிக்கும்வகையில், கூடுதலாக ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

12. கணினித் தமிழை மாணவர்கள், ஆர்வலர்களிடையே கொண்டு சேர்க்க வேண்டும் என்று "கணித் தமிழ்24" மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கருத்தின் அடிப்படையில், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் ஒருங்கிணைப்பில், மாதந்தோறும் கணித் தமிழ் தொடர்பான புதிய தொடர் சொற்பொழிவுகளை நடத்திட ஆண்டொன்றுக்கு ரூ.3.00 இலட்சம் தொடர் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்படும்.

கணித்தமிழ் தொடர் சொற்பொழிவு. Annual lectures. கணினித் தமிழைப் பற்றி ரூ. 3 இலட்சம் செலவில் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

13. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழிகாட்டுதலில், 25 ஆண்டுகளுக்கு முன்பு நடத்தப்பட்ட "தமிழிணையம் 99" மாநாட்டிற்குப் பிறகு, 2024 பிப்ரவரி 8, 9, 10 ஆகிய நாள்களில் "பன்னாட்டுக் கணித்தமிழ் 24" மாநாடு இந்த அரசால் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் கலந்துகொண்ட பன்னாட்டு மொழியியல் அறிஞர்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும், வளர் தொழில்நுட்பங்களில் தமிழுக்கான இடம் குறித்து ஆக்கப்பூர்வமாக விவாதிக்க, குறிப்பிட்ட கால இடைவெளியில், இம்மாநாடு தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர். அதனடிப்படையில், மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை, தமிழ் இணையக் கல்விக் கழகத்தால் "பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு" நடத்தப்படும்.

இறுதியாக மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பன்னாட்டுக் கணித்தமிழ் மாநாடு நடத்துதல். 25 ஆண்டுகளுக்குப்பிறகு, தமிழிணையம்-99 conference நடந்தபிறகு, அதே தேதிகளில் பிப்ரவரி 8, 9, 10 இங்கே 2024 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது.

அதில் இன்றைக்கு இருக்கக்கூடிய Artificial Intelligence, Machine Learning எல்லாம் முக்கியமாக கவனம் செலுத்தி, பல போட்டிகள் நடத்தி, Hackathon எல்லாம் நடத்தி, பல வகைகளில் மாணவர்களுக்கும், ஆராய்ச்சி செய்கின்றவர்களுக்கும், இன்னும் நான் சொல்லவேண்டுமென்றால், Regional language-ல் வேறு எந்த மாநிலமும் செய்யாத அளவிற்கு, இந்தியாவில் பேசும் மொழியினர் அனைவரும் இங்கே வந்து Anna Universityம், IIT Madrasம் தான் இப்போது Large language learning model-ல் இந்தியாவில் இருக்கும் சிறந்த கல்வி நிறுவனங்களாக இருக்கிறார்கள். அதை 25 ஆண்டுகளுக்குப் பிறகு செய்ததை, இனிமேல் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்வதற்கான அறிவிப்பு இது. ஏனென்றால், தொழில்நுட்பம் அந்தளவிற்கு வேகமாக முன்னேறிக் கொண்டே இருக்கிறது.

இறுதியாக, பல பாரம்பரிய, பழமையான தரவுகளை digitalise செய்து, online செய்து, அதாவது உறுப்பினர் அருள் அவர்கள் கேட்டதுமாதிரி, இது பரவுவதற்கு சுமார் 15 இலட்சம் தரவுகளை, பக்கங்களை, ரூ. 2 கோடி நிதியொதுக்கீடு செய்து, முதல் ஆண்டு முயற்சியாக மேற்கொள்ளப்படும் என்று 14வது அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14. இன்றைக்கு செயற்கை நுண்ணறிவுக் காலத்தில், தமிழ் மொழியின் பயன்பாட்டினை மேம்படுத்தவும், தமிழுக்கான செயற்கை நுண்ணறிவுக் கருவிகளை உருவாக்கத் தேவையான மொழித்தரவுகளைப் பெறுவதற்காகவும், தமிழ் இணையக் கல்விக்கழக மின்னுலகத்தில் உள்ள ஏறத்தாழ 15 இலட்சம் உருபடப் பக்கங்களை எழுத்துணரித் தொழில்நுட்பத்தின் உதவியோடு உரைவடிவில் மாற்றிட திட்டக் காலமான இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.2.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் பதிலுரை வழங்கினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை எஸ்.ஏ. இராஜமாணிக்கம்

ஜுலை 3 (1998)



சுயமரியாதை இயக்க ஆரம்பகால தொண்டர், திராவிட முன்னேற்றக் கழகத்தில் வட்டச் செயலாளர் பொறுப்பில் தொடங்கி நகரச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை ஏற்று கோவை மாவட்டத்தில் கழகம் வளர்க்க அரும்பாடுபட்டவர்.

கோவை மாவட்டத்தில் தலைவர் கலைஞர் தங்கியிருந்தபோது, அன்றாடம் கலைஞர் அவர்களை சந்தித்து உரையாடக்கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

நகர்மன்ற உறுப்பினர், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், கருப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட போராட்டங்களில் பங்கேற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

முதலமைச்சரின் பாராட்டத்தக்க 'நீட்' எதிர்ப்புத் தொடர் பணிகள்!

## ஜூலை 15-இல் திராவிடர் கழகம் சார்பில் இரு சக்கர வாகனப் பிரச்சாரம்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, ஜுலை 3 -* கொரோனாவைவிட கொடிய 'நீட்'டை ஒழிக்கத் திராவிடர் கழகம் மேற்கொண்டுவரும் 'நீட்' ஒழிப்புப் பணிக்கு ஒத்துழைப்புத் தாரீர் என்றும், ஜுலை 11 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை திராவிடர் கழகம் நடத்தும் தமிழ்நாடு தழுவிய இரு சக்கரப் பிரச்சாரப் பயணம் ஜுலை 15 அன்று சேலத்தில் சங்கமிக்கும் என்றும், 'நீட்' தேர்வால் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படுகிற அனைத்துத் தரப்பினரும் ஆதரவு தர வேண்டும் என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேட்டுக்கொண்டுள் ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

'நீட்' என்ற மருத்துவப் படிப்பு, மேற்பட்டங்கள் படிப்பு களுக்குத் திணிக்கப்பட்டு ஒன்றிய அரசின் "தேசிய தேர்வு முகமை" என்ற ஒன்றின்மூலம் - கடந்த எட்டு ஆண்டு களுக்கும்மேல் நடைபெற்று வரும் தேர்வுகளில் ஊழல் கொடி கட்டிப் பறப்பதோடு, நாற்றமெடுத்து நாடு முழுவதும் மாணவர்களும், பெற்றோரும் கொதித்துக் கொண்டுள்ளனர்.

ஒடுக்கப்பட்ட மாணவர்களின் மருத்துவக் கனவை நிறைவேற்ற இயலாத நிலையில், பல மாநிலங்களில் இளம் மாணவர்கள், மாணவிகள், பெற்றோரின் உயிர்களையும் பலி வாங்கிடும் ஒரு கொடுமையான வாள் 'நீட்' - அதன் பிறவி ஊழல்கள் படமெடுத்தாடி பழிதீர்த்து வருவது ஒருபுறம்.



மற்றொருபுறம் பல்லாயிரக்கணக்கில் இந்த 'நீட்' தேர்வை மூலதனமாக்கிக் கொண்டு 'கோச்சிங் சென்டர்' என்பதன்மூலம் ஏழை, எளிய, நடுத்தர விவசாயிகளின் பிள்ளைகளின் - பெற்றோர்களின் வாழ்வாதாரத்தையே, ரத்தம் குடிக்கும் அட்டைபோல லட்சக்கணக்கில் பகற்கொள்ளை நடைபெறுகிறது!

இந்தியா முழுவதிலும் உ.பி. முதல் பல வடபுலங்கள், தென்மாநிலங்கள், குஜராத், மகாராட்டிரா, ஆந்திரா, தெலங்கானா மாநிலங்கள், ஹிந்தி பேசும் மாநிலங்களான டில்லி, அரியானா, மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், மேற்குவங்கம், பீகார், ஒடிசா உள்பட பல மாநிலங்களிலும் கடுமையான எதிர்ப்புகள் பாதிக்கப்பட்ட காரணத்தால், நீட் எதிர்ப்புக் குரல் எங்கும் ஓங்கிப் பரவலாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு - தி.மு.க. அரசு இரண்டுமுறை (இப்போது மூன்றாவது முறை தீர்மானமாகவும்கூட) தனி சட்ட மசோதாவாக - விலக்கு அளிப்பதுபற்றி ஜனநாயக முறையில் சட்டமன்றத்தில் - அதற்கு அதிகாரம் இருக்கும் காரணத்தால், நிறைவேற்றி அனுப்பியது. இங்குள்ள ஆளுநர், தனக்கு இல்லாத அதிகாரத்தை இருப்பதாகக் கருதி, இறுக்கிக் கிடப்பில் சில காலம் போட்டார்; மக்கள் கிளர்ச்சிமூலம் வாங்கிய 'அரசியல் குட்டுகள்' காரணமாக, வேறு வழியின்றி, இறுதியில், "தான் ஒரு தபால்காரர் மட்டுமே" என்பதை உணர்ந்து, குடிய ரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி, அங்கே உள்துறை அமைச்சகத்தில் அது முடிவு அறிவிக்கப்படாமல் உள்ள அவலம் இன்னமும் தொடர்கிறது!

#### உச்சநீதிமன்றமும் கடுமையான கேள்விகள்!

மீண்டும் காங்கிரஸ் கட்சி உள்பட அடங்கிய இந்தியா கூட்டணியும், பல கட்சிகளும், இன்று இந்த 'நீட்' தேர்வு, ஊழலின் ஊற்றுக் கண்ணாகவும், கார்ப்பரேட் கொள்ளையர்களின் வசதி படைத்த கூடாரமாகவும் இருப்பதைப் புரிந்து கொண்டு, எதிர்ப்புக் குரலை ஓங்கி ஒலித்து வருகின்றன.

மீண்டும் வீண் பிடிவாதம் - வறட்டு ஜம்பத்தைக் காட்டி வருகிறது - ஒன்றிய பா.ஜ.க. அரசு. உச்சநீதிமன்றமும் 'நீட்' ஊழல்பற்றி கடுமையான குரலில் கேள்விகளை கேட்டுள்ளது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் 'நீட்' தேர்விலிருந்து "தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்திடுக" என்று கோரும் தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்து, ஒருமனதாக மீண்டும் நிறைவேற்றிய முதலமைச்சருக்கு மக்களின் பாராட்டு குவிந்து வருகிறது.

அதுமட்டுமல்லாமல், எட்டு மாநில முதலமைச்சர்களுக்கும் நமது முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் தனித்தனியே கடிதங்களை எழுதி, 'நீட்' தேர்வை ரத்து செய்யவோ அல்லது விரும்பும் மாநிலங்கள் மட்டும் வைத்துக்கொள்ளலாம் என்று கடிதமும் எழுதி காலத்தாற் தேவைப்படும் கடுமையையும் செவ்வனே நிறைவேற்றியுள்ளார்.

திராவிடர் கழகம் 'நீட்' தேர்வு ஒழிப்பிற்கான அதன் தொடர் பணியாக வருகின்ற 11 ஆம் தேதி தொடங்கி, தமிழ்நாடு முழுவதும் இரு சக்கர வாகனப் பிரச்சார 'நீட்' எதிர்ப்புப் பிரச்சார பணிகளை 5 அணிகளாக தமிழ்நாட்டின் பட்டிதொட்டிகள், சிற்றூர், பேரூர் எல்லாம் பிரச்சாரம் செய்து, சேலத்தில் கல்வி வள்ளல் காமராஜரின் பிறந்த நாளான ஜுலை 15 ஆம் தேதி அன்று நிறைவு செய்ய உள்ளது.

புதிய கோணத்தில் சட்டப் போராட்டத்திற்கும் அது ஆயத்தமாகி உள்ளது.

'நீட்' தேர்வு என்ற இந்தப் பலி பீடம் மூடப்படுகிற வரை இடையறாத போராட்டம் நடத்தி, அதற்கு எந்த விலையும் கொடுக்கவும் திராவிடர் கழகம் எப்போதும் தயாராக இருக்கும். அனைவருக்கும் இக்கொடுமையின் கோரத்தின் வடிவத்தை விளக்கிப் போராடி, வெற்றி பெறும் வகையில் அறப்போர்க் களத்தில் என்றும் சலிப்பில்லாத சமராக அதனை நடத்த, அனைத்துப் பாதிக்கப்பட்ட, பாதிக்கப் படவிருக்கிற அத்துணை பேரின் ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம்.

கோவிட் - 19 என்ற கரோனா தொற்றைவிட ஆபத்தானது - இந்த 'நீட்' தேர்வு! அரசமைப்புச் சட்ட விரோத இந்த 'நீட்' தேர்வு கல்லறைக்குப் போகும்வரை நம் பணி ஓயாது! ஓயாது!! ஓயவே, ஓயாது!!!

இது உறுதி! உறுதி!! உறுதி!!!

'நீட்' தேர்வை மாற்றி, "பழைய முறைதான்; புதிய வர்ணம்" என்றெல்லாம் திருத்தி நீடிக்க யோசித்தால், அது மூளைச்சாவை அடைந்தவருக்கு மற்ற சிகிச்சை தந்து அமர வைக்கும் அர்த்தமற்ற போக்கு போன்றதேயாகும்!

எனவே, அடியோடு 'நீட்' தேர்வைக் கைவிட்டு, மாநிலங்களின் உரிமைகளைக் காப்பதே சரியான அரசமைப்புச் சட்ட அணுகுமுறையாகும்.

இவ்வாறு கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.